REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.		
[தபால் சிலவுள்பட]		
ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 2¼
ஆறுமாத சந்தா	...	ரூ. 1¼
தனிப்பிரதி முக்காலணா		
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஹூ தை-மீ 10௳ 1941- ஹூ ஜனவரி-மீ 23௳ | ஸ- 3

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

பலவகையிலும் தீதே!! பாரத நாட்டிற்கு தனிச்சிறப்பை அளிப்பவைகளில் கற்பரசிகள் ஒருவர். அவர்கள் சிறை சென்றுதான் ஸ்வராஜ்யம் பெறவேண்டிய நிலை இன்னும் வரவில்லை. அசட்டுத்தனமாக பெண்களைச் சிறைக்கனுப்பியதை நினைத்து ஒரு ஸமயம் வருந்த நேரிடும்!

ஏமாற்றமா? காங்கிரஸ்தலைவர் சிறைசென்றதற்காக சென்னை நகரபரிபாலன ஸபையை ஒத்திவைக்க வேண்டுமென்ற காங்கிரஸ் கக்ஷி தீர்மானம் தோற்றது மிக அவமானம்!!

அமெரிக்காவில் வர்ணச்ரமம்!! திருவாங்கூரில் சாமன்லால் என்பவர் (ஹிந்து அமெரிக்கா எனும் நூலாசிரியர்) ஓர் உபன்யாஸத்தில் பல சிலாசாஸனங்களையும் ஆலய அமைப்புகளையுங் காட்டி கொலம்பஸ் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே நம்மவர் அங்கிருந்ததாக விளக்குகிறார்.

நல்ல காலம் உதயமாகுமா? அமெரிக்கத் தலைவர் பூர்ணமனதுடன் ஜநநாயக நாடுகளுக்குப்பேருதவி புரிய முன் வந்துளார். அதற்கேற்ற எல்லா செயல்களுமாரம்பிக்கப்படுகின்றன! ஜயம் விரையில்!

மதுரையில் அங்குரார்ப்பணம்! ஹிந்துமாஸபை நடந்தபின் மஹம்மதியர் கூட்டம் ஊர்வலம் நடத்தி பலவகையான அட்டஹாஸங்களைச் செய்தனர்.

கோபமில்லை வருத்தமே!! பிரும்மஸ்ரீ திவான்பஹதூர் கே எஸ் ஆர் சாஸ்திரிகளவர்களும் அவர் தந்தையும் தென்னாட்டுத் திலகங்கள். அத்தகையோர் வைதிக ஸதாசாரத்திற்கு ஆணிவேர். அந்த்யகாலத்தில் தந்தையும் இப்போது இவாளும் நம்மைக் கைவிட்டுவிட்டார்களே என்றுதான் வருத்தம். இன்றும் என்றும் அவர்கள் கல்வி பொதுஜந கைங்கர்யம் முதலியவைகளை நானும் உலகும் போற்றாமலிருக்கமுடியாது. எக்காரணமாயினும் பண்டைய ஆசாரத்தைவிட்டதற்கு வருந்தாமலிருக்கமுடியாது?

சேரவாரும் ஜகத்தீரே! என்றார் ஓர் பக்தர் அதுபோல் ஹிந்துமாஸபையில் சேர்ந்தாலும் பிரும்மஸ்ரீக்களான கே எஸ் ராமஸ்வாமி சாஸ்திரிகளையும் டி எம் கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களையும் ஸநாதந தர்ம சாஸ்திரவிரோதமில்லாமல் கூடியவரை கலந்துழைக்க வேண்டுகிறோம்.

தெப்பக்குளத்தில் ஸந்த்யாதி வகுப்பு!! ஒரு பாங்கியின் வருமான லாபத்தைக் கொண்டு பிராமண பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதுடன் நாகேஸ்வரர் கோவிலில் மாலையில் ஸந்த்யாவந்தநம் முதலிய வேதபாகம் கற்பிக்கப்படுகிறது! இங்ஙனம் ஒவ்வோர் நகரமும் செய்தால் மாணவர் சீர்திருத்தமடைவர்.

வருகை! பிரும்மஸ்ரீ உவே அக்நிஹோத்ரம் தாதாசார் ஸ்வாமிகள் திருக்குமாரர் ஸ்ரீ உ வே அக்நிஹோத்ரம் ராமாநுஜாசார் ஸ்வாமிகள் சென்னை சாந்தாச்ரமத்திற்கு விஜயம் செய்தார். சில உபன்யாஸங்களை நடத்திச்செல்வார்.

67 வயதில்- 25 வயதுப் பெண் கல்யாணம்

ஜோஹர் சுல்தான் தமது 67 வது வயதில் 25 வயதுள்ள ஒரு பெண்ணை ஸமீபத்தில் விவாஹம் செய்து கொண்டாராம்.

இந்தமாதிரி வழக்கம் ஐரோப்பியர்களிடையிலும் பெருவாரியாக இருக்கிறது. இந்திய சீர்திருத்த ஸ்திரீகள் என்ன பதில் சொல்வார்களோ?

காந்திஜியின் துர் உபதேசம்

அண்ணாமலை ஸர்வகலாசாலை மாணவர் தடியடி விஷயமாக ஸர்க்கார் நிஷ்பக்ஷபாதமான விசாரணை நடத்த மறுக்கும் பக்ஷத்தில் மாணவர்கள் அந்த கலாசாலையை பஹிஷ்கரித்து விட வேண்டுமென்பதே தமது கருத்து என்று மாணவர்களுக்கு காந்திஜி உபதேசம் செய்திருக்கிறார்.

காந்தி படம் வைக்க ஆக்ஷேபம

சென்னை சர்க்கார் அறிக்கை

சென்னை மாகாணத்திலுள்ள முனிஸிபல் பள்ளிக்கூடங்களில் காந்தி படம் வைக்க முஸ்லீம்கள் ஆக்ஷேபித்தால் வைக்கக் கூடாதென்றும், மேற்படி படம் வைத்திருக்குமிடங்களிலிருந்தும் அதை எடுத்துவிட வேணுமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் ஓர்அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்

தீவ்ர ஜனநாயகக்கக்ஷி ஸ்தாபனம்

எம். என். ராய் முயற்சி

ஸ்ரீமான் எம். என். ராய் காங்கிரஸின் தற்காலகொள்கைகளையும் முக்கியமாக காந்தீயத்தையும் பலமாக ஆக்ஷேபித்து காங்கிரசுக்கு எதிராக தீவ்ர ஜனநாயகக் கக்ஷியை ஸ்தாபிக்க காங்கிரஸ்காரர்களை ஒன்று சேர்த்து வருகிறார். கல்கத்தாவிலும் பம்பாயிலும் இக்கக்ஷியானது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

மாவுகளை கொடுத்து குழந்தைகளின் குடலைக்கெடுக்காதீர்கள். தாய்ப்பால்தான் குழந்தைகளுக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலைவிசேஷமாய்வளர்க்கும் திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing& Postge extra)

"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.
ப்ரோப்ரைடர்:V. B. நடராஜசாஸ்திரீ
ஆயுர்வேதாசார்யா

ஸாங்கவேத சாஸ்திர அத்யயனம்

(ஆத்மவித்யாபூஷணம் வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்)

சென்ற வாரத்தில் ஸம்ஸ்கிருத வித்யாப்யாஸம் அவச்யமென்றேன். அதுவும் இப்போது முன்போலில்லை. இங்கிலீஷைப் போல் பட்டப்ரதானமாயும் உத்யோகலக்ஷ்யமாயுமாகிவிட்டது. முன்பு ஸம்ஸ்கிருத வித்யாப்யாஸ க்ரமம் எவ்விதமிருந்ததென்று தெரிந்துகொள்ளமுடியவில்லை. குரு சிஷ்ய க்ரமம், குருகுல வாஸம், உபதேசக்ரமம், இவையெல்லாம் நன்றாய் தெரியவில்லை. ஆனால் அப்போது ஸம்ஸ்கிருத வித்யைகள் அதிகமாயிருந்தன. இப்போது பணம் கொடுத்து வாசிக்கச்செய்தாலும வித்யாபிவிருத்தி ஏற்படவில்லை. முன் காலத்தில் வித்யோபதேச ரீதியே, வேறு தினுசு என்று தெரிகிறது. முன்பு ஆசார்யனின் அனுக்ரகமே முக்கால் வாசி சிஷ்யனுக்குத் திடமாக பாஷாக்ஞானத்தை உண்டுபண்ணினதாகத் தெரிகிறது. இல்லாவிட்டால் காளிதாஸன் எந்த காவ்யத்தை வாசித்து வ்யுத்பத்தியை பெற்றான்! இப்போது 10—12 வருஷம் வாசித்தாலும் வ்யுபத்திஞானமோ சாஸ்திரஞானமோ நன்றாய் ஏற்படுவதில்லை. அதற்கு, குருவின் தோஷமோ, சிஷ்யதோஷமோ, உபதேசத்தின் மாறுதலோ, என்னவோ தெரியவில்லை. ஆகவே ஸம்ஸ்கிருத வித்யோபதேச ரீதியையும் மாற்றவேண்டும் முன்பு ஒரு மஹரிஷியினிடம் பதினாயிரக் கணக்கான சிஷ்யர்கள் இருந்தார்கள். அந்த சிஷ்யர்களின் ஆஹாராதி வ்யவகாரமெல்லாம்எப்படி நடந்தது! இருக்க, வஸதி எங்கே ஏற்பட்டிருந்தது! இதையெல்லாம் ஆலோசித்தால் ஆச்சர்யமாயிருக்கும்.

முன்பு மாணவர்களுக்கு எட்டாவது வயது ஆனவுடன் குரு குலத்தில் வேதாத்யயனமே முதலில் ஆரம்பிப்பது வழக்கம். சுக்லபக்ஷத்தில் வேதங்களையும், கிருஷ்ண பக்ஷத்தில் வேதாங்கங்களையும், அப்யஸிப்பது ஆதிகாலத்து வழக்கம். அதெல்லாம் இப்போது கதையாய்ப் போய்விட்டது. முன்பு வேத சாஸ்திரங்களில் கௌரவபுத்தி இருந்தது போல் இப்போது கிடையாது. அர்த்தமற்ற சுஷ்கக் கிரந்தமாக அதனை இப்போது மதிக்கிறார்கள். வேத சாஸ்திரங்களுக்கு அனேக ஆபத்துக்கள் ஏற்பட்ட போதிலும், இப்பவும் சில மஹான்களிடம் அவை ப்ரகாசித்துக் கொண்டுதான் இருக்கின்றன. முன்பு வேத சத்ருக்கள் ப்ரத்யக்ஷமாய், இடையூரைச் செய்துவந்தார்கள் இப்போது ஹித சத்துருக்களாக இருந்து கொண்டு வேத வித்யைக்குக் கெடுதல்களை செய்து வருகிறார்கள். நமது ஆபத்துக்கெல்லாம், வேதங்களின் துர்தசையே காரணமாகும். வேதங்களை நாம்தான் அலக்ஷ்யம் பண்ணிவிட்டோம். மேற்கு தேசத்தார் அவற்றை அதிகமாக ஆதரிப்பதாகத் தெரிகிறது, இல்லாவிட்டால் "மாக்ஸ் முல்லர்" என்பவர் ஸ்ரீவித்யாரண்யர் இயற்றிய வேத பாஷ்யங்களையெல்லாம் இங்கிலீஷில் தர்ஜமா செய்திருக்க முடியுமா? வேதமென்று பெயரிட்டுக் கொண்டு தமது மதக்கிரந்தங்களையும் மகம்மதியர் முதலியோர் போற்றி வருகிறார்கள். நமது மதத்தின் கௌரவத்துக்கெல்லாம் வேதமே காரணம், பிரமாணம் உத்க்ருஷ்டமாயிருந்தால் தான், ப்ரமேயமான, மதமும் உத்க்ருஷ்டமாயிருக்க முடியும். துர்பலமாக, ப்ரமாணமிருக்குமாயின் மதமும் துர்பலமாய்தானிருக்கும். கோடிக்கணக்கான மூலதனங்களிருந்த போதிலும் ஒரு மதத்தை ச்ரேஷ்டமாகக் கருதுவதற்கில்லை. கால விசேஷத்தில் பணம் அழிந்தால் அம்மதமும் அழிந்துவிடும்.

நமது மதத்திற்கு வைதிக மதமென்று பெயர். வேத சாஸ்திரங்களே நமது மதத்துக்கு மூல ப்ரமாணமாகும். நமது மதம் புருஷ புத்தி கற்பிதமன்று. மகரிஷிகளும், அவதார புருஷர்களும், பகவானும், ஹிரண்யகர்பரும், நமது மதத்தை உண்டுபண்ணினவர்களல்ல. இதனாலேயே அவர்களுடைய பெயரால் நமது மதத்தை வ்யவஹரிப்பதில்லை.

"வேதம்" என்ற பதத்தாலேயே வேத கௌரவம் வ்யக்தமாகிறது. "வித-ஞானே" "விதல்,லாபே" என்ற தாதுவிலிருந்து வேத பதம் நிஷ்பன்னமாயிருக்கிறது. இதனால் சகல ச்ரேயஸ்களையும் தெரிவித்துகொடுத்து அடையும்படி செய்வதேவேதமென்ற பதத்தின் அர்த்தம். மனுவும் வைதிக வித்யையை பிராம்மணர்களுக்குப்புதையலாகச்சொல்லியிருக்கிறார். அவ்வேதப்புதையலை இழந்து விட்டு தரித்திரர்களாக ஆகிவிட்டோம். வேதமென்ற கண்களை இழந்து குருடர்களாக விளங்குகிறோம். இப்படி இருப்பது உசிதமாயில்லை. இப்பிரபஞ்சம் அநாதிப்ரவாஹ நித்யமாயிருப்பதுபோல், வேதங்களும் அநாதிப்ரவாஹ நித்யஸித்தங்கள். வேதமோ, பிரபஞ்சமோ இவை ஒருகாலத்தில் ஒருவரால் உண்டுபண்ணப்பட்டவையல்ல. வேதங்கள் நாமப்ரபஞ்சம். பிரபஞ்சமோ அர்த்த ரூபமானது. நாமார்த்தங்கள் எக்கால்த்திலும் விட்டுப்பிரியாத ஸம்பந்திகள். நாமப்ரபஞ்சம் அநாதி நித்யமென்றால் அர்த்த ப்ரபஞ்சத்தையும் அநாதி நித்யமாக அங்கீகரித்தலே யுக்தமாகும்.

(தொடரும்)

ராஜபுத்ர க்கதைகள்

முன்வாரத் தொடர்ச்சி

சித்தூர் அரசன் தனது ஸாமந்தர்களை வேண்டிக்கொண்டும் அவர்கள் அவனுக்கு உதவிபுரிய இணங்கவில்லை. "உங்கள் பாப்பாவே இப்பொழுது உங்களைக் காப்பாற்றட்டும்" என்று சொல்லி விலகிக் கொண்டனர். அஞ்சாநெஞ்சம் படைத்த பாப்பாவுக்கு இது ஒரு அரிய ஸந்தர்ப்பமாக வாய்த்தது.

தோள்வலிக்கு நிகரான தவ வலியும் பப்பாவுக்கு கிடைத்திருந்தது. நாகேந்திரத்தில் ஆச்ரம பசுக்களை மேய்த்து வரும்கால் ஒரு ஸம்பவம் நேர்ந்தது. சாயங்காலம் வீடு திரும்பும்போது ஓர் பசு மட்டில் பாலே இல்லாமல் இருந்தது. பல நாட்கள் இப்படி இருக்கவே பப்பாவின் மீது ஸந்தேஹம் உண்டாயிற்று. பப்பாவும் கவலைக்குள்ளாகி கூர்ந்து கவனித்தான். அந்த பசு செல்லுமிடமெல்லாம் தானும் சென்றான். ஒருவரும் இதுவரையில் மிதிக்காத ஓர் புதருக்குள் சென்றது. தானகவே பால் சுரந்து மறைந்திருந்த ஓர் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் நடத்தியது. ப்ரமித்தான் பப்பா. மெல்ல மெல்ல உட்சென்று நோக்க ஓர் தபஸ்வி அங்கே புதருக்குள் தென்பட்டார். அவர் தான் ஹாரீதர். பையனின் பக்திக்கு மகிழ்ந்து அன்பு கனிந்த குரலில் அவனை அனுக்ரஹித்தார். நாள் தவறாது அவரைப் புஷ்பங்களாலும்பால்கொண்டும்பூஜித்தான் தர்மோபதேசம் பெற்றான். சிவபூஜாவிதியைக்கற்றான். ரிஷியே உபநயனம் செய்து வைத்தார். "ஏகலிங்கரின் திவான்" எனும் பட்டமளித்தார். பப்பாவுக்கு பார்வதிதேவி காட்சி கொடுத்தாள். வேல் வாள் வாளி சிலை, தூணி யாவும்தந்து தன் கையாலேயே அணிவித்தாள். "அஸ்திர சஸ்திரங்களால் வெல்லமுடியாது உன்னை" என்று வரமும் வழங்கி விட்டு சென்றார் ஹாரீதர். கோரக்நாதருடைய அருளும் பெற்றான். குன்றையும் துணிக்கும் தெய்வீக வாளையும் பெற்றான். வீரச்ரேஷ்டனாகி விட்டான்.

அவ்வன்மை வாய்ந்த பப்பாவுக்கு எதிர்த்து வரும் அன்யனை அடக்குவது ஓர் பொருட்டோ? தனிமையாகவே யுத்தத்தை துடங்கினான் அவர் வீரத்தைக்கண்டு மகிழ்ந்த இதர ஸாமந்தர்களும் தாங்களாகவே இவனுடன் வந்து சேர்ந்துகொண்டனர். இவனுடன் கூட நின்று போர் புரிவதே ஓர் கௌரவம் அல்லவா? துருஷ்கனை துரத்திக்கொண்டே சென்றான். தன் பூர்விக நகரான கஜனிக்கும் சென்று ஸலீம் என்ற அரசனை ஸிம்மாஸனத்திலிருந்து இரக்கி, சௌவிர குலத்தைச்சேர்ந்த ஒருவனை அரசனாக்கி விட்டுச் சித்தூர் திரும்பினான். பிரபுக்களும் ஸாமந்தர்களும் இவ்வீரனே சித்தூரை இனி ஆளவேண்டுமென தீர்மானித்தனர். பதினைந்து ஆண்டு பூர்த்தியாகும் முன்பே பப்பா சித்தூரிலிருந்து அரசாளத்துடங்கினான்! ஹிந்து சூர்யன் என்றும் ராஜகுரு என்றும் சக்ரவர்த்தியென்றும் போற்றப்படுகிறான் இன்றும் இப்பப்பாராவல்.

நூறு வருஷங்கள் வாழ்ந்தவன் பப்பா. கணக்கற்றமனைவிகள், எண்ணற்ற குழந்தைகள். மனம் தளராது முதிர்ந்தவயதிலும் பிள்ளைகளிடம் சித்தூரைவிட்டுவிட்டு மேற்குநோக்கிச் சென்று ம்லேச்சர்களை வென்றான். குராஸானை ஜயித்து அங்கு அரசுபுரிந்தான். ம்லேச்ச ஸ்த்ரீகளை மணந்துகொண்டு மக்களைப் பெற்றான். இஸ்மாஹன், காண்டஹார், காச்மீரம், இராக், இரான், தூரான், காபிரிஸ்தான் முதலிய பிரதேசங்களையும் பிடித்தான். அங்கும் மணம் புரிந்துகொண்டான். 130 குமாரர்களை அங்கு பெற்றதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொருவரும் தன் தாயின் பெயர் கொண்ட ஒரு குலத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். இவர்களுக்கு நோஷேர பட்டானிகள் என்று பெயர். இவனது ஹிந்துக் குமாரர்கள் 98 பேர்கள். அக்னி உபாஸி ஸூர்ய வம்சியர்கள் என்று கூறப்படுபவர்கள். ஆதிநாடான ஸௌராஷ்டிரத்துக்கு சென்று சிலர் அரசு புரிந்தனர். மார்வாரில் சிலர் வஸித்தனர். ஆராபிகளுடன் சிலர் கலந்து வாழ்ந்தனராம்.

கடைசி காலத்தில் மேருமலையடியையடைந்து தபஸ்வியானான் என்று சிலர் கூறுகின்றனர். அவன் இறந்ததும் உடலை அக்னி ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்று ஹிந்துக்குமாரர்கள் எடுத்தனர். ம்லேச்ச மக்கள் தங்கள் மரபுக்கிணங்க குழியில் புதைக்க வேணுமெனப்பிடிங்கிக்கொண்டனர். மூடியிருந்த துணியை திறந்து பார்த்த பொழுது உடலோ இலும்போ காணவில்லை. அவ்வளவும் தாமரைப்புஷ்பங்களாகத்தோன்றினவாம். அவைகளை எடுத்துச் சென்று ஓர் புஷ்கரணியில் நட்டு வைத்தனர் என்று ஒரு சாரர் அபிப்பிராயப்படுகின்றனர்:—

(தொடரும்)

K. V.

ஸ்ரீ கே. எஸ். ராமஸாமி சாஸ்திரியாரின் ஸமாதானம்.

"சித்ரபானு" எழுதியது

திவான் பஹதூர் K. S. ராமஸ்மாமி சாஸ்திரிகள் அவர்கள் 9—1—41 ஆர்ய தர்மத்தில் எழுதிய "ஸமாதான"த்தை படித்துப் பார்த்தேன். சாஸ்திரிகள் அவர்கள் முதிர்ந்த பர்ண்டித்யமுள்ளவர். தர்ம சாஸ்திர விஷயங்களைப்பற்றி அநேக வருஷங்களாய் ஆலோசனை செய்து வருபவர். என்றும் ஆஸ்திக்யத்தினின்று வழுவ நினைக்காதவர். இவர்பாண்டித்யத்தையும்பெரு முயற்சியையும் அறியாதவர் தென்னிந்தியாவில் இலர்.

இந்த முன்னுரையுடன் நான் சாஸ்திரிகள் அவர்கள் வியாசத்தில் சிறிது விசாரம் செய்யத்துணிகிறேன். அவர் கூறிய முக்ய அம்சங்கள் பின்வருபவை.

1. நான்கு வர்ணங்கள்தான் உண்டென்று மனு சொல்கிறார். 2. இப்போது தீண்டாதார் சூத்திரர்களாக இருந்து அசுத்த வாழ்க்கையாலும், தொழில்களினாலும் கீழ்ப்படுத்தப் பட்டவர்கள். 3. அவர்களின் அசுத்த வாழ்க்கையைநீக்கிவிட்டால் அவர்களும் மற்ற ஹிந்துக்கள் போல் ஆவார்கள். 4 எட்டுக்கோடி ஜனங்களை சாக்ஷாத் சண்டாளர்களென்று சொல்ல முடியாது. 5. தீண்டாமை முதலிய தோஷங்கள் பிறப்போடு உண்டானவை அல்ல. 6. ஹரிஜனங்களை ஹிந்து சமூகத்தினின்று நழுவ விடக்கூடாது.

இவ்வம்சங்கள் எல்லாவற்றையும் பற்றி உசிதமான வழியில்விசாரம் செய்ய எனக்கு அர்ஹதையில்லை. அது படித்தபெரியோர்கள் செய்யவேண்டிய காரியம். ஆனால் முதல் இரண்டு அம்சங்கள் சம்பந்தமாக என்புத்திக்கு தோன்றிய விஷயத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "நான்கு வர்ணங்கள்தான் உண்டென்று மனு சொல்கிறார்". இது எக்காலத்தின் உண்மை நிலைமையை தெரிவிக்கிறது? தற்காலத்திற்கு ஒவ்வுமா? இன்று நான்கு வர்ணங்களை யாராவது சுட்டிக்காட்ட முடியுமா? இன்று நான்கு வர்ணங்கள் இல்லை என்பது நிச்சயம். ஆனால் அவ்விதம் மனுவிகிதப்படி இல்லாதகுறையை நீக்கிக்கொள்ள முடியுமா? மனு எழுதிய காலத்தில் அவ்விதம் வர்ண விபாகம் சீர்குலையாமல் அனுஷ்டானத்தில் இருந்திருக்கலாம். அதைத் தான் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் மனு எந்த ஜனசமூகத்தை உத்தேசித்து இவ்விதம் விதித்தார்.? அக்காலத்தில் மனுவின் வரம்புக்குட்படாத ஜனசமூகம் லோகத்தில் எந்த பாகத்திலாவது இருந்ததா? இல்லையா? இந்த பூமண்டலத்தை முழுவதுமா அவர் நான்கு வர்ணத்தவராக பிரித்தார்? இந்த சந்தேகங்களை த்ரிகால ஞானிதான் தீர்க்கவேண்டும். நாம் ஓர் உசிதமான அனுமானத்தை தான் கைக்கொள்ள முடியும். மனுவை பின்பற்றியவர்கள் மானவர்கள் என்று வைத்துக் கொள்வோம். (ஆரியர்கள் என்ற வ்யவஹாரம் தற்போது பலவிதமான கொள்கைகளுக்கு இடம் கொடுத்திருப்பதால் அதை தவிர்ப்போம்) இம்மானவர்களைத் தவிர வேறு பலர் உலகின்கண் பலவிடங்களில் இருந்தார்கள் என்றே ஊஹிக்கவேண்டும். இப்போது ஹிந்துக்கள், இந்தியர்கள் என்பவர்களைத் தவிர வேறு பல ஜனஸமூஹங்கள் இருப்பதுபோல, நான்கு வர்ணம் என்பது மானவர்களுக்குள் வ்யவஸ்த்தை. மானவர்களைத்தவிர வேறு சமூகங்களிலும் சண்டாளர்களென்று ஓர் ஜாதியார் உண்டு என்று சொல்லிப்பார்ப்போம்.

அப்போது ஒரு கேழ்வி எற்படுகிறது. பிரதிலோம சேர்க்கையினால் இந்நான்கு வர்ணத்தவரின் பெருக்கான சங்கரஜாதிகளில் ஒன்று சண்டாள ஜாதி என்று மனுவே சொல்லவில்லையா என்பது. ஆம்! வாஸ்தவம். அங்கு சொல்லியிருப்பது எனக்கு பின்வருமாறு அர்த்தமாகிறதே யொழிய சண்டாள ஜாதியே அவ்விதம் உத்பத்தியானதென்றும், இன்றுகணக்கிடப்படுகிற எட்டு கோடித்தாழ்ந்தவகுப்பாரும் பிரதிலோமஜர்கள் என்றும் எனக்கு அர்த்தமாகவில்லை ஸங்கரஜாதியின் அபகர்ஷத்தைச் சொல்லும் மனு அத்தகையோர் சண்டாளர் என்று சொன்னார். நெற்றிக்கு இட்டுக்கொள்ளாதவன் கிருஸ்தவன் என்று ஒரு விருத்தர் சொன்னால் நெற்றிக்கு இடாததிலிருந்து கிருஸ்தவஜாதி உத்பத்தியானதென்று அர்த்தமில்லை. அவன் கிருஸ்தவன் என்று மதிக்கத்தக்கவனென்று அர்த்தம்! கிருஸ்தவன் என்று ஒருவன் இருக்கிறான். அவன் தர்மங்கள் பிரஸித்தமானவை. மற்றொருவன் அவனுக்கு சமானதர்மனாக ஆகலாம் என்றும் லக்ஷணையைக் கொள்ள வேண்டும். அப்படியே சூத்ரசம்சர்க்கத்தால் பிராமணஸ்திரீயினிடம் உண்டானவன் சண்டாளனுக்கு சமானதர்மனாக ஆகிறான் என்று ஏற்படுகிறது. இதனால் சண்டாள தர்மமும் பிரஸித்தம் என்று ஆகிறது. அச்சண்டாள தர்மம்அஸ்பிருச்யத்வமே. நவீன சரித்ரவிமர்சகர்கள் ஆரியர்களுக்கு அஸ்பிருச்யத்வம் தெரியாதென்றும் அவர்கள் இந்தியாவில் குடியேறி கீழ் திசைவரை பரவியபின் நாட்டு ஜனங்கள் சிலர் திராவிடர் என்பார் கொண்டாடிய அஸ்பிருச்யத்வத்தை இவர்களும் அங்கீகரிக்கநேர்ந்ததென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். இது உண்மையானாலும் சண்டாள ஜாதியும் அஸ்பிருச்யத்வமும் தனியேயிருந்ததென்றும் அவர்கள் சங்கரத்தினால் உண்டானவர்கள் தான் என்று வாதிக்க முடியாதென்றும் மனுவினால் அஸ்பிருச்யத்வம் உண்டாக்கப்படவில்லையென்றும் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

சாஸ்திரிகள் அவர்கள் சொல்லுகிறபடி சூத்திரர்களே தாழ்த்தப்பட்டு சண்டாளர் ஆனார் என்பது அஸம்பாவிதம் என்று தோன்றுகிறது. மேற்கூறிய வ்யாக்யானத்தை ஒப்புக்கொள்வதானால் சண்டாளர்கள் எப்போது ஹிந்துக்கள் ஆனார்கள் என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு பதில் நான் கேழ்கிறேன். நாம் எப்போது ஹிந்துக்களானோம்? மனு ஹிந்துக்கள் என்று நம்மை குறிப்பிட்டிருக்கிறாரா? அல்லது ஸனாதனிகள் என்று தான் சொன்னாரா? புராதன லோகத்தில் ஹிந்துக்கள் இல்லை அன்னிய தேசத்தவர்கள் நம்மை தெரிந்து கொள்ளும் போது ஸிந்து நதிக்குப்பின் இருப்பவர்கள் என்று ஸ்தூலமாக வியவஹரிக்கலானார்கள். துருஷ்கர்கள் வந்தபோது தங்களைத் தவிர மற்ற இந்து தேசவாசிகளை இந்துக்கள் என்று வழங்கினார்கள். ஆங்கிலேயர் இந்துக்களுக் குரிய சட்டத்தை அனுஷ்டிக்கும் போது சண்டாளர்களுக்கு வேறு சட்டப்புஸ்தகமில்லாததால் அவர்களையும் இந்து சட்டத்திற்குள் பட்டவர்களாகக் கருதினார்கள். ஆனால் ஸ்ம்ருதிப்படி எல்லா விஷயங்களையும் அவர்கள் நிர்ணயிக்கவில்லை. அவரவர்களின் பழக்கவழக்கங்களையே முக்கியமாய் கொண்டு நீதி செலுத்துகிறார்கள். ஆகையால் ஸ்ம்ருதிகளே சண்டாளர்கள் விஷயத்தில் ப்ரயோகிக்கப் படுகின்றன என்றும் சொல்ல முடியாது. இவ்விதம் நாமும் சண்டாளர்களும் பல படையெடுப்புக்காரர்கள் துவக்கிய வாஸனா பலத்தால் இந்துக்களானோம், இந்த கால சக்கிரத்தை பிற்போக்காக திருப்ப யாரால் முடியும்? அப்படி திருப்ப அவசியமில்லை.

இத்தீண்டாமை மேல் வர்ணத்தாரின் கொடுமையினால் தான் உண்டாயிருக்க வேண்டுமென்று கொள்வது ஆலோசிக்கத் தக்கது. நம் பெரியோர்களோ மேல் அதிகாரிகளோ வந்தால் நாம் விலகுகிறோம். காளிதாஸர்கவி, விரக்தனான தபஸ்வி. நகர ஜனங்களை அருவருப்புடன் பார்ப்பதாகச் சொல்கிறார். ப்ராதஸ்னான கர்மானுஷ்டானபரர்களாய் மஹா ஞாதாக்களான பெரியோர்கள் முன் நிற்கக்கூட நமக்கு கூசுகிறது. இதுகளெல்லாம் நிர்ப்பந்தத்தினால் வந்ததென்றும் ஹடாத்காரத்தாலும் அஹம்பாவத்தாலும் சிலர் கீழ்படுத்தப் பட்டார் என்றும் சொல்வது நியாயமில்லை. ராஜீய விஷயங்களுக்காக ஜனத்தொகை பலம் வேண்டி ஹரிஜனங்களை நமக்கு சமதையாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒளிமறைவில்லாமல் வாதித்தால் அவ்விதப் போக்கை ராஜ்யதந்தர நிபுணர்கள் விசாரித்தல் தகும். வீண் அபவாதங்களை நம் முன்னோர் தலையில் கட்ட வேண்டாம் என்பதுதான் என் பிரார்த்தனை. ஒரு காரியம் தவறிவிட்டால் சாமான்ய ஜனங்கள் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டுவார்கள், உன்னால்தான் வந்தது என்று. விவேகிகள் யதார்த்தகுணதோஷங்களை ஆராய்ந்து பார்த்து தெளிவான மனோபாவத்துடன் மேல் நடக்க வேண்டியதை சிந்திக்கவேண்டும். தீண்டாதவன் தானாக ஒதுங்கிக் கொண்டிருந்தமையால் தான் அப்படி ஒதுங்காத ஜாதியான கிருஸ்தவனாக ஆன பிறகு அவன் ஒதுங்கவில்லை. தீண்டாமை விலகாவிடில் வேறு மதத்தை தீண்டாதார்கள் ஆச்ரயித்து விடுவார்களென்றும் அப்படி ஆகிவிட்டால் ராஜீய விஷயங்களில் ஹிந்து சமூகம் பலஹீனப்பட்டு மற்றவர்களால் நசுக்கப்படும் கதிக்கு வந்து விடுமென்றும் பீதி ராஜதந்திர நிபுணர்களுக்கிருந்தால் ஆபத்துவரும் முன் அணைகோலிக்கொள்ள வேண்டுவது மதியே ஆகும். ஆனால் இந்த அவச்யத்தை சர்ச்சை செய்ய எனக்கு யோக்யதை இல்லை. சாஸ்திரிகள் போன்ற பெரியோர் தான் வழிகாட்ட வேண்டும்.

(2)

ஸ்ரீமான் சாஸ்திரிகள் அவர்கள் போன வாரப் பத்திரிகையில் தன் அபிப்ராயத்தை நன்றாக எல்லோருக்கும் தெரியும்படி எழுதிவிட்டார்கள். ஸ்ரீமான் கெ. எஸ். ஆர். அவர்கள் தர்மராஜ்யா பத்திராதிபராகவும் சனாதன தர்ம சபைகளில் அக்ராஸன ஸ்தானம் வகித்தும் வந்திருக்கிறார்கள்.

திருவாங்கூரில் தீண்டாதார் ஆலயப்ரவேசம் ஏற்பட்டதும் அதற்கு சாதகமான கோட்பாடுகளுடன் தர்ம ராஜ்யா முதலிய பத்திரிகைகளில் தன் அபிப்ராயத்தை எழுதினார்கள். அதற்கு ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் முதலிய பெரியோர்கள் தகுந்த பதில் எழுதினார்கள்.

தற்சமயம் ஒரு சபையில் தர்மத்திற்கு மாறாக பிரசாரம் செய்தும் தான் சீர்திருத்தவாதி என்றும் தன் ஹிருதயத்தை யாவரும் அறிந்து கொள்ளும்படியும் வ்யக்தமாக எழுதிவிட்டார்கள். ஸோமதேவ சர்மாவின் விமர்சனம் என்ற தலை அங்கத்தின் கீழ் அநேக மத சபைகளில் அவர் அறியவே நான் தலைமை வஹித்துமிருக்கிறேன் என்பதாக கே. எஸ். ஆர். அவர்கள் எழுதி

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம- வரு தை-மீ 10௳

ஸாத்விகர்களின் வழி

நமது தேசத்தில் ஜாதித்வேஷ விஷமானது நாளுக்கு நாள் தீவ்ரமாக அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பிட்ட ஒரு வகுப்பாரின் பாஷை, ஆசாரம், கலை, நாகரீகம் ஆகியவைகளில் அஸூயை கொண்டு அழித்துவிடப் பல வழிகளாலும் கட்டுப்பாடான முயற்சி கிளம்பியிருப்பதைப் பார்க்கிறோம். தேசத்தில் ஏற்பட்டுள்ள சிறிய பெரிய சங்கங்கள் எல்லாமே மேற்கண்ட விஷமக் கொள்கையை பஹிரங்கமாகவோ மறைமுகமாகவோ அடிப்படையாகக்கொண்டு வேலை செய்கின்றன. காந்திஜி ஆரம்பித்துள்ள தீண்டாமை விலக்கு இயக்கமும் மேற்கண்ட உத்தேசம் கொண்டதே. தீனர்களை உத்தாரணம் செய்யும் உயர்ந்த நோக்கம் அந்த இயக்கத்தின் உள் கருத்தன்று. அனாதிகாலமாயுள்ள ஜாதி தர்மத்தையும், வியவஸ்தைகளையும் தகர்த்தெறிவதே அதன் பிரதான நோக்கமென்பது வெட்டவெளிச்சமானது "தீண்டாமைவிலக்கு" என்ற அடைமொழியே இந்த விபரீதமானகொள்கையை விளக்கவல்லது.

பஹிரங்கமாக ஜாதித்வேஷ பிரசாரம் செய்வோருக்கு காந்திஜியின் இந்ததீண்டாமை விலக்கு இயக்கம் மிகுந்த உதவியாயிருக்கிறது. இந்த துஷ்பிரசாரத்தின் காரணமாக இப்போது உத்யோக தோரணையிலும், பொதுவாகவும் ஒரு வகுப்பாருக்கு பலவித தீங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஸர்க்கார் உத்யோகங்களுக்கு ஒரு வகுப்பார் தீண்டாதாராக ஒதுக்கப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, சட்டம், உத்திரவு நிர்ப்பந்த மூலமாக, ஜாதி, மத ஆசார தர்மங்களையும் அழிக்கக் கங்கணம் கட்டியுள்ளார்கள். இதற்கு, சமீபத்தில் ஏற்பட்டுள்ள உதாஹரணங்களைப்பார்க்கலாம். திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஜாதிபேதமின்றி எல்லோரும் ஒரு பங்க்தியில் உணவு தின்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பது, குறிப்பிட்ட ஒரு வகுப்பாரிடம் த்வேஷத்தினாலல்லவா? திருவண்ணாமலைக் கோவிலில் அர்த்த மண்டபத்தில் பிரவேசிக்கக் கூடாதென்று டிரஸ்டிகள் செய்த உத்திரவின்உள்கருத்தென்ன? டிரஸ்டிகளில் ஒருவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறிப்பிட்ட ஒரு ஜாதியாரிடம் வெறுப்பும், வியவஸ்தைகளை அழிக்கும் உத்ஸாஹமும் நிரம்பி யிருக்கவில்லையா? சு-ம-கக்ஷியார், ஹோட்டல்களிலும் பொதுஸ்தலங்களிலும் ஜாதிபேதமின்றி உணவு கொள்வதற்காக சத்யாக்ரஹம் செய்யப்போவதாக பயமுறுத்தி வருகிறார்கள்.

ராஜீய அபிப்ராய வேற்றுமையிருப்பினும் மதாசார நாசவேலையில் எல்லாக் கக்ஷிகளும் ஒன்றுபட்டவைகளே. மற்றவைகளைவிட காங்கிரஸ் இதில் அபாயகரமானதென்பதும் அநுபவத்தில் தெரிந்தது. ஆதலால் மதாசாரநாசவேலைக்காரர்கள் ஒன்றுகூடி பலம் பெற்று நம்மீது படையெடுத்து வருகையில் சாத்விகர்களாகிய நம்மவர்களின் வழி என்ன ? இதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்யவேண்டிய காலமிதுவே.

தற்காலம், சட்டமறுப்பு, சத்யாக்ரஹம் பலாத்காரம் ஆகிய சாதனங்கள் மலிந்து கிடக்கின்றன. இந்த சாதனங்களைக் கொண்டு தங்கள்தங்கள் கார்யத்தை சாதித்துக்கொள்ள முன்வருகிறார்கள். ஆனால் இந்த முறைகள் ஆஸ்திகர்களாகிய நமக்கு ஏற்றவையல்ல. இவை பயன்படக்கூடியவையுமன்று. எதிரிகள் கையாளும் முறைகளையே நாமும் கையாளுவது அர்த்தமற்றதாகும். நமக்கு முன்னோர்காட்டிய உயர்ந்த வழிகளிருக்கின்றன. தேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மூர்க்கத்தனமான ஜாதித்வேஷ நிலைமையில் நம்மவர்கள் எதிரிட்டு நிற்காமல் எவ்வளவுதூரம் விலகி நிற்கிறோமோ, அவ்வளவுதூரம் அது நமக்கு பிற்காலத்தில் நிரந்தர வெற்றியளிக்கக் கூடியது. மேலும் இவ்வித அக்ரமங்களைத் தடுக்க க்ஷத்திரியர்களும் தண்டோபாயமும் நமக்கு இல்லாததால் மேற்கண்ட முறையே சிறந்தது.

தஞ்சை ஜில்லா போர்டார் காந்தீய விஷத்தில் ஊறியே மேற்கண்ட விபரீத உத்திரவைப் போட்டிருக்கிறார்களென்பது தெளிவு

ஒரு பழம் அழுகிவிட்டால் அது அருந்த அர்ஹதையற்றதென்று எறிந்துவிடுகிறோமேயல்லது கிரயம் கொடுத்து வாங்கினதென்பதற்காக அந்த அழுகலை உபயோகிப்பதில்லை. ஏராளமாகத் தயாரிக்கப்பட்டிருந்த உணவில் ஒரு துளி விஷம் கலந்துவிட்டால் கூட அதை அப்படியே தள்ளிவிடுகிறோம். அதுபோல் சிர்திருத்தவிஷம் தோய்ந்த இந்த உத்திரவை நாம் விலகிநின்று ஸமாளிக்க வேண்டியதே முறை. மேற்படி உத்திரவை ஏற்கமுடியாத வகுப்பார் அந்தக்கலாசாலையிலிருந்து விலகிவிடுவதே நல்லது. இத்தகைய கலாசாலைகளாலேயே நமது வித்யைகள் விருத்தியடையவேண்டுமென்பதில்லை. முன்காலங்களில் நமது வித்யைகள் ஆடம்பரமின்றியும் கூட்டமின்றியும் இக்காலத்திலிருப்பதைவிட சிறந்து வளர்ந்துவரவில்லையா? இப்போதும் அப்படியே செய்ய வழியில்லாமல் போகவில்லை. ஹோட்டல்களில் பிராம்மணர்களுக்கு நிர்ப்பந்தம்ஏற்பட்டால் அது உண்மையான பிராம்மணர்களால் வரவேற்கத்தக்கதே. பிராம்மணர்கள் ஹோட்டல் நடத்துவதையும், ஹோட்டல்களில் சாப்பிடும் வழக்கத்தையும் நிறுத்திவிடுவதற்கு இது ஏற்ற சந்தர்ப்பமல்லவா ? அப்படிச்செய்தால் எதிரிகளின் சத்யாக்ரஹப் ஸாஹஸத்துக்கு அவகாசமில்லாமலே போய்விடும். இது நமக்கு அவமானகரமன்று. பௌருஷக்குறைவுமாகாது. நமது சமூகம் பரிசுத்தப்பட இதுவே உயர்ந்த உபாயமாகும்,

இதைவிட்டு நாம் எதிரிகளுடன் எதிர்ப்போரிட்டுக் கொண்டிருப்பது தகுதியல்ல. ஸாத்யமுமன்று. நமது ராஜ்ய, மத, ஸமூஹ உரிமைகள் நியாயமாக ஒப்புக்கொள்ளப்படும் நற்காலம் வரும்வரையில் மேற்கண்ட கொள்கைப்படி நடப்பதே நமக்கு உசிதமென்று தோன்றுகிறது.

குறிப்புகள்.

பாகிஸ்தானைக் கண்டிக்க காந்திஜி பயப்படுகிறார்!

காந்திஜி ஸமீபத்தில் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில் ஜின்னாவுடன், ஸமரஸப் பேச்சு நடத்தும் விஷயத்தையும், ராஜீய நெருக்கடி நிலைமையையும் பற்றிக் கூறியிருக்கிறார். அதில் பாகிஸ்தான் விஷயத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் கூறியிருக்கிறார். தற்போது நம்தேசத்தில் பிரபலமாகி வரும் பாகிஸ்தான் கூச்சலால் ஹிந்துக்களின் மனதில் ஏற்பட்டுள்ள நிலைமையை காந்திஜி அறியாதவரல்ல, காந்திஜியோ, காங்கிரஸோ, பாகிஸ்தானைப் பற்றிக் கண்டிக்கவில்லை யென்ற புகார் பலமாக இருக்கிறது. முஸ்லீம்களின் பிரீதியை ஸம்பாதிக்க காங்கிரஸ்காரர் ஹிந்துக்களுடைய உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பலியிட்டு வருவதைப் போல் பாகிஸ்தான் அக்கிரமத்தையும் காங்கிரஸ்காரர்கள் ஆதரிப்பார்களென்று பலர் ஸம்சயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஹிந்து மஹா சபைத் தலைவர் ஸ்ரீ ஸவர்க்கார் தமது பிரஸங்கத்தில் இதைப் பற்றி தெளிவாகக் கூறியிருப்பதே இதற்கு ருஜுவாகும்.

காந்தியும், காங்கிரஸும் பாகிஸ்தானை ஆதரிக்கக்கூடியவர்களென்றே ஸ்ரீ ஸவர்க்கார் சபதம் செய்கிறார்.

இப்போது காந்திஜி பாகிஸ்தான் விஷயமாகக் கூறியிருப்பது ஸ்ரீ ஸவர்க்கார் சொல்லுவதை உறுதிப்படுத்துவதாகவே காண்கிறது .பாகிஸ்தானை ஏற்றுக்கொண்டால்தான் காந்திஜியுடன் ஸமரஸம் பேசமுடியுமென்று ஜின்னா நிபந்தனை விதித்திருக்கிறாராம். இதற்கு காந்திஜி தாம் பாகிஸ்தானை ஏற்கமுடியாதென்று நேரடியாகப்பதில் சொல்வதல்லவோ நேர்மை? அதைவிட்டு, பாகிஸ்தான் வேண்டுமா வேண்டாமா வென்பதை முஸ்லீம் சட்டஸபை மெம்பர்களே யோஜித்து முடிவு கூறவேண்டுமென்கிறார் காந்திஜி சட்டஸபை மெம்பர்களான முஸ்லீம்கள் பாகிஸ்தான்வேண்டுமென்று கூறிவிட்டால் காந்திஜி அதற்கு ஸம்மதிப்பாரென்றே ஏற்படுகிறது. பாகிஸ்தானால் பாதிக்கப்படுகிற ஹிந்துக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி காந்திஜி கவலைப்படுவதாகவே தெரியவில்லை தாம் ஹிந்துவென்பதையும், தமக்கு இவ்விஷயமாக அபிப்பிராயம்கூற உரிமையிருப்பதாயுமே காந்தி நினைக்காமல் பேசுவது முஸ்லீம்களின் தாக்ஷிண்யத்திற்கல்லவா? ஹிந்துக்களனைவரும் பாகிஸ்தானைக்கண்டிப்பது இவருக்குத்தெரியாதா? இப்படியிருக்க முஸ்லீம் சட்ட ஸபை மெம்பர் அபிப்பிராயபடி தாம் நடக்கத் தயாராயிருப்பதாக காந்திஜி சொல்லுவதை ஹிந்துக்கள் ஆக்ஷேபிக்கவேண்டியதே.

காந்தி அபிப்பிராயமானது ஹிந்து ஸமுதாயத்தின் பிரதிநிதித்வம் பெற்ற அபிப்பிராயமாகாது.

அஸத்யம் கலந்த ப்ரதிக்ஞை

(எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ. பி. எல்.)

சுதந்திர தினத்தில், அடியிற்கண்டது அடங்கிய பிரதிக்ஞை எல்லாரும் செய்து கொள்ளவேண்டுமென்று காந்திஜி சொல்லுகிறார்.

We believe that non violent action in general, and preparation for non violent direct action in particular, require the...... removal of untouchability. We know that distinction between caste Hindus and Harijans must be abolished, and that Hindus have to forget these distinctions in their daily conduct. Such distinctions are a bar to non-violent action. We pledge to a disciplined observance of Congress principles and policies......We recognise that the effective spread of non-violence must bring about communal harmony and the complete eradication of untouchability in every shape and form"

காங்கிரஸ்காரர் அல்லாதவர்களும் அந்த தினத்தை தீண்டாமை விலக்கு தினமாக கொண்டாடவேண்டுமென்று காந்திஜி சொல்லுகிறார்.

"ஸ்வராஜ்யம் நமது உரிமை. ஹிம்ஸையோடு கூடின ஸாதனத்தால் அதைப்பெற முடியாது. அஹிம்ஸைவழியைக் கைக்கொண்டு வெகுவாய் பலன் கண்டிருக்கிறோம். அஹிம்ஸையால் ஸ்வராஜயம் பெறவேண்டும். தீண்டாமையை ஒழிக்காவிட்டால் அஹிம்ஸை நிலைக்காது."

இந்தக் கொள்கையை ஷை ப்ரதிக்ஞை ஸ்திரப்படுத்துகிறது.

ஸ்வராஜ்யம் பெறுவது இருக்கட்டும். தீண்டாமையில்லாமல் வாழ்க்கை உண்டா? வேண்டாததைத் தீண்டாதிருப்பது பிராணிகளுக்கு இயல்பு. பசுமாடு மாம்ஸத்தைத் தீண்டாது. புலி புல்லைத் தீண்டாது. மனிதன் பாம்பைத் தீண்டமாட்டான். ப்ராணிகள் ப்ரியம் உள்ள பொருளை ஏற்பதுபோல் அப்ரியமான பொருளை விலக்குவது சகஜம்.

ஸ்வராஜ்யத்தில் நமக்கு ஆசை இருக்கிறது. அதற்கு ஸாதகமானவற்றை விரும்பவேண்டும். விரோதமானதை விலக்கவேண்டும். சுய ஆட்சி பெற, பிரிட்டிஷ் ஆட்சியை விலக்கவேண்டும். பிரிட்டிஷ்காரரை ஆயுதத்தால் தாக்கினால் மட்டும் ஹிம்ஸை என்பதில்லை. நாம் ஸ்வராஜ்யம் விரும்புவதை பிரிட்டிஷார் விரும்பவில்லை. அதனால் அவர்களுக்கு அது ஹிம்ஸை. காங்கிரஸ் ஆட்சி ஜனாப் ஜின்னாவுக்கு ஹிம்ஸையாகத்தோன்றுகிறது. அதனால் பாகிஸ்தான் வேண்டுமென்று அவருக்கு ஆசை. அவர் ஆசையைப் பூர்த்தி பண்ணினால் அவரிடம் அஹிம்ஸை அநுஷ்டிக்கமுடியும்.

யாராயிருந்தாலும் சரி, தனக்கு கெடுதல் என்று நினைப்பதை விலக்காமலிருக்க முடியாது.

சுத்த அஹிம்ஸை ஸ்வராஜ்யத்துக்கு ஸாதனமாகாது. தீண்டாமை அஹிம்ஸைக்கு ஸாதனமில்லை. ஸ்வராஜ்யம் அடைவதற்கு விரோதமாயிருப்பவர்களை, அல்லது இருப்பவைகளை விலக்கவேண்டும். அதாவது அவைகளைத் தீண்டக்கூடாது. கெடுதலாயுள்ளதை விலக்கத்தான் வேண்டும். விலகியிருக்க வேண்டியவைகளைச் சேர்த்து வைத்தால் ஹிம்ஸை உண்டாகும். பாபம் விலக்கக்கூடியது. விலக்காவிட்டால் துன்பம் உண்டாகும். புண்யம் ஏற்கக்கூடியது. சேர்ப்பது, விலக்குவது என்ற வித்தியாஸம் இல்லாமல் உலகத்தில் ஒன்றும் நடக்கவில்லை. நல்லதைக்கொள்ளுதலும், கெட்டதை விலக்குவதும் தான் தர்மம். தர்மம் வேறு, அதர்மம் வேறு என்று வித்யாஸம் பண்ணாமல், தர்மத்தை அநுஷ்டிப்பது ஸாத்யமில்லை. ஆகையால், தீண்டாமை விலக்கு என்று பொதுப்படையாகச்சொல்லி, அதை ஒரு தர்மமாகவோ, கொள்கையாகவோ சொல்வது நிற்காது. Removal of untouchability என்பதை ஒரு தத்வம் போல திருப்பித்திருப்பிச்சொல்லப்படுகிறது. ஒரு மந்த்ரம் போல ஜபிக்கப்படுகிறது, அந்தப் பொதுவாசகத்தின் அர்த்தம் உண்மையல்ல. உண்மையில்லாத வார்த்தைகளை ப்ரதிக்ஞை பண்ணக்கூடாது. உண்மையைக்கருதுவோர்கள், அந்தப் பிரதிக்ஞை பண்ண மறுக்கவேண்டும். பிரித்துச்சொல்லாமல், பொது வாசகமாக "தீண்டாமை விலக்கு" (Removal of untouchability என்ற ஒரு கொள்கையை யார் சொன்னாலும், அது உண்மையல்லவென்று தள்ள வேண்டும்.

ஜீவ சரீரங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கின்றன. அதனதன் சரீரத்துக்கு உவகையான சேர்க்கைகளால், அதனதன் உயிர் நிலைத்து வளர்கிறது. ஒவ்வாத சேர்க்கையால் உயிருக்கு ஹானி உண்டு. ஒவ்வாத சேர்க்கையை உண்டுபண்ணுவது அஹிம்ஸையல்ல, ஹிம்ஸையே. சேர விரும்பாதவைகளை பலாத்காரமாய்ச் சேர வைத்தல் ஹிம்சையாகும். வித்யாசம் இல்லை, வித்யாஸம் இல்லை, என்று சொல்லிக் கொண்டிருந்தால், இருக்கும் பிரிவுகள் போய் விடாது; விரோதம் கூட ஸம்பவிக்கும். காங்கிரஸ் பிரசாரத்தால் மகம்மதியரின் வித்யாஸம் போய் விடுமோவென்று பயந்து, ஜின்னா "பாகிஸ்தான்" என்று தனித்துப் பிரித்து விடும்படி பிடிவாத வார்த்தை கிளப்பியிருக்கிறார்.

ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் வித்யாசமில்லையென்று ஷை பிரதிக்ஞை கூறச்சொல்லுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் அநேக அம்சங்களில் வித்யாசம்உண்டு. ஒரு வகுப்புக்கும், மற்றொரு வகுப்புக்கும் வித்யாசங்கள் உண்டு. அநேக அம்சங்களில் ஒற்றுமையும் உண்டு. வித்யாசங்கள் இருப்பது அஹிம்சைக் கிளர்ச்சிக்கு விரோதம் என்று சொல்வது தப்பு.

காங்கிரஸ் கோஷ்டியில் வித்யாஸம் இல்லாமல் எல்லாரும் ஒரு தரத்தில் இல்லை. அகில இந்திய காங்கிரஸ் பிரஸிடெண்டுக்கும், மாகாண, ஜில்லா, காங்கிரஸ் நிர்வாகிகளுக்கும், சாதாரண காங்கிரஸ் மெம்பருக்கும் அதிகாரத்தில் வித்யாஸம் உண்டு. என்றாலும், "அஹிம்ஸை"யை காங்கிரஸ் அநுஷ்டிக்க முடிகிறது. அம்மாதிரி, ஹிந்து ஸமூகத்திலும், பல தரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஒருமுகப்பட்ட காரியத்தை ஸாதிப்பதற்கு மனோபாவமும் லக்ஷ்யமும் ஒன்றாக இருக்கவேண்டியது ஒன்றுதான் அவசியம். ஹிந்துக்களுள் வகுப்பு வித்தியாஸங்களைப்போக்கின பின்தான் அஹிம்ஸையை அநுஷ்டிக்க முடியுமென்று ப்ரதிக்ஞையில் சொல்லியிருப்பது பொய். ஆகையால் அவ்விதம் ப்ரதிக்ஞை எடுத்துக் கொள்ளுதல் முடியாது.

காங்கிரஸ் கொள்கைகளையும் விதிகளையும் மீறாமல் நடப்பதாக உறுதி சொல்லும்படி ப்ரதிக்ஞை வேண்டுகிறது. இதனால் மீறுவது தவறு என்று ஏற்படுகிறது. காங்கிரஸ் ஒழுங்கை மீறினவர்களுக்கு அடிக்கடி காங்கிரஸ் மேலதிகாரிகள் கடுமையான தண்டனை விதிக்கிறார்கள். அப்படி தண்டனை விதிப்பது ஹிம்ஸையா, அஹிம்ஸையா? காங்கிரஸ் விதிகளை மீறினவர்களை காங்கிரஸ் அதிகாரிகள் கோஷ்டியிலிருந்து விலக்கிவைக்கிறார்கள். அதாவது, அவர்களைத் தீண்டாதவர்களாக்குகிறார்கள். காந்திஜி ஆக்ஞைப்படி இந்த மாதிரி தீண்டாமை பலபேர்களிடத்தில் பிரயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

ப்ரதிக்ஞையின் கடைசி வாக்கியத்தில் அஹிம்ஸைப்பிரசாரம் நன்றாகப்பண்ணினால் தீண்டாமை எல்லாரூபபேதங்களுடனும் முற்றிலும் போக்கடிக்கப்பட்டுவிடும் என்று சொல்லியிருக்கிறது. 'எல்லாரூபபேதங்களுடனும்' என்று சொன்னதனால், பிறப்பு மூலமாக ஏற்பட்ட சமஸ்த ஜாதி வ்யவஸ்தைகளும், என்பது கருத்து. அஹிம்சைப் பிரசாரம் என்ற வியாஜத்தினால், ஜாதி வ்யவஸ்தையை முழுவதும் நாசம் செய்ய வேண்டுமென்பது ப்ரதிக்ஞையின் கருத்தும், பிரயோஜனமும் ஆகும்.

மேலேகாட்டியபடி சேர்த்தல், விலக்கல், என்ற நடக்கை உலக வ்யவஹாரத்தில் உண்டு. சாஸ்த்திரங்களின் படிக்கும், விதி நிஷேதங்கள் உண்டு. தீண்டாமை விலக்கு என்ற கொள்கை உலக ஒழுங்கையும் சாஸ்திர வரம்புகளையும் அழிக்கக்கூடியது. அந்தக்கொள்கை அடங்கிய ப்ரதிக்ஞை அஸத்ய பிரதிக்ஞை. சத்தியத்தில் பற்றுள்ளவர்கள் அவ்வித ப்ரதிக்ஞையை ஏற்றுக்கொள்ள மறுக்கவேண்டும்.

ஆஸ்திகர்கள் தனித்தனியாகவும், சுதந்திர தினத்தன்று கூட்டங்கள் கூடியும், ஷை ப்ரதிக்ஞை அஸத் ப்ரதிக்ஞையென்று எடுத்துச்சொல்லி, சத்தியத்தை நாடும் காந்திஜிக்குத் தெரிவிக்கவேண்டியது அவச்யம். அப்படிச் செய்வது சத்ய ப்ரதிஷ்டைக்கும், தேச க்ஷேமத்துக்கும் உபகாரமான கடமையாகும்.

ஸ்ரீ சாஸ்திரியாரின் ஸமாதானம்

சென்ற ஸஞ்சிகையில் திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள் எழுதியுள்ள ஸமாதானத்தை நமது வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அதில் ஸ்ரீ சாஸ்திரிகள் வர்ண வ்யவஸ்தையைப்பற்றியும், தீண்டாதாரைப்பற்றியும் தமது அபிப்பிராயத்தை வ்யக்தமாக கூறியிருக்கிறார். இவைகளைப் பற்றி நாம் பதில் சொல்லவேண்டியது அதிகமிருக்கிறது. அதை மற்றொரு ஸந்தர்ப்பத்தில் சொல்லுவோம். ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் இன்று இங்கு பிரஸ்தாபிக்க விரும்புகிறோம். அதாவது:—

"பலாத்கார முறையிலோ, நிர்பந்திக்கும் வழிகளிலோ ஸமூஹவ்யவஸ்தைகளைப்பற்றி சட்டங்கள் பண்ணுவது சரியல்லவென்று ஸ்ரீ ஸவர்க்காரும் நானும் எங்கள் பேச்சுக்களில் வ்யக்தப்படுத்தியிருக்கிறோம்"

என்று ஸ்ரீ சாஸ்திரியார் கூறியிருக்கிறார்கள் நாம் இவர்களுடைய பிரஸங்கங்களைப்படித்தவரையில் மேற்கண்ட அம்சம் இருப்பதாகத்தெரியவில்லை. ஆகையால் இந்த பாகம் எந்தவிடலிருக்கிறதென்று ஸ்ரீ சாஸ்திரியார் எடுத்துக்காட்டினால் அதன்படி நமது அபிப்பிராயத்தை வெளியிடுவது ஸௌகர்யமாயிருக்கும். ஸ்ரீ சாஸ்திரியாரோ, வேறு எவரோ மேற்கண்ட பிரஸங்க பாகங்களை எங்குள்ளதெனத் தெரிவிக்ககோருகிறோம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஸங்கிராந்திக்கு இரண்டு தினம் முன்பாக கும்பகோணம் விஜயம் செய்தார்கள். ஒரு வாரமாக ஸ்ரீமடத்தின் முக்ய கார்யங்களும் முத்ராதிகாரி நியமன விஷயமும் கவனிக்கப்பட்டன. பலவூர்களிலிருந்தும் முத்ராதிகாரிகள் வந்திருந்தார்கள். முத்ராதிகாரிகள் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் தங்கள் கார்யங்களை நிறைவேற்றும் விஷயமாக ஏகோபித்து ஆலோசனை செய்யப்பட்டது.

ஸ்ரீ ஆசார்யாளுக்கு பிக்ஷைகளும், பாத பூஜைகளும் பல ஆஸ்திகர்களால் தினந்தோறும் நடத்தப்பட்டுவருகின்றன. வெளியூர் உள்ளூர் பிரமுகர்களும் பொது ஜனங்களும் ஸ்ரீ ஸ்வாமிகளை தர்சித்துப் போகிறார்கள். வியாழக்கிழமை ஸ்ரீ ஸ்வாமிகள் வேப்பத்தூருக்குப் பிரயாணமாவார்களென்று தெரிகிறது.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்திற்கு விஜயம்

மேற்படி பிரஸ் மானேஜர் ஸ்ரீமான் கல்யாணசுந்தரத்தின் பிரார்த்தனைக்கிணங்க ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு அச்சுக்கூடத்திற்கு விஜயம் செய்தார்கள். கார்யாலயம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீஸ்வாமிகளுக்கு பூர்ணகும்பம் கொடுத்து மாலையிட்டு உபசரிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள் சற்று நேரம் ஆஸனத்தில் தங்கியிருந்து ஆபீஸ் சிப்பந்திகளுக்கு அநுக்ரஹம் செய்துவிட்டு அச்சுக்கூடத்தை சுற்றிப்பார்த்தும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள எலக்ட்ரிக்பவர் யந்திர வேலையை பார்த்து விட்டும் அவிடமிருந்து திரும்பினார்கள். ந. நி.

ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யஸ்வாமிகளின் ஸந்நிதானத்தில் உபந்யாஸம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்தை முன்னிட்டு 15—1—41 புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் மஹா ஸந்நிதானத்தில் குடந்தை டவுன் ஹை ஸ்கூல் ஸ்ரீ எம். ராம ராவ், B. A., அவர்களால் ஜீவத்வய ஆவேசம், வைகுண்டத்தில் முக்தா முக்தஸ்தான பேதம் முதலிய வற்றைப்பற்றி ஓர் உபந்நியாஸம் செய்யப்பட்டது. ஸ்ரீமான்கள் எஸ். மஹாலிங்க அய்யர், ஜகதீஸ்வர சாஸ்திரிகள், ஆங்கரை ரங்கசுவாமி சாஸ்திரிகள் கே. எல். வியாஸராய சாஸ்திரிகள் முதலியோரும் வந்திருந்தனர். உபந்நியாஸத்தின் முடிவில் ஸ்ரீ ஸ்வாமிகளும் கிரமமுக்தி, பரமமுக்தி, பக்தியின் ஒன்பது வகைகள் முதலிய வற்றைப்பற்றி ஓர் அரிய பிரசங்கம் செய்து அநுக்ரஹித்தார்கள். ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ ராமராவால் ஸநாதன தர்ம ஸேவை நன்கு செய்யப்பட்டு வருகிறது என்றும் மேற்படி உபந்யாஸத்தினால் சந்தோஷப்படுவதாயும் இனிமேன்மேலும் விருத்தியடையும்படி அநுக்ரஹம் புரிவதாயும் ஆசிகூறி பல மந்திராக்ஷதைகளை வழங்கினர்.

[ந. நி.]

நமது நிருபர்களுக்கு வேண்டுகோள்

ஆர்யதர்மம் நிருபர்கள் ஆங்காங்கு நடக்கும் முக்ய விஷயங்களை மாயும் யோசிதமான வியாஸங்களையும் எழுதியனுப்பி ஒத்துழைக்கக்கோருகிறோம். ஸமாசாரங்களை வளர்த்தாமல், கடுதாசியில் ஒரே பக்கத்தில் மசியால் விளக்கமாகவும் எழுதி யனுப்பவேணும். திங்கட்கிழமைக்குள் வெளியூர் நிருபர்கள் தங்கள் விஷயங்களை அனுப்பினால் அந்த வாரத்திலேயே பிரசுரிக்க ஸௌகர்யப்படும்.

ஸம்ஸ்கிருத எழுத்துக்களையோ, ஸம்ஸ்கிருத பதங்களையோ கலந்து எழுதுவதால் பிரசுரிக்க தாமஸம் ஏற்படுவதுடன் சிரமமும் ஏற்படுகிறது. ஆகையால் கூடிய வரையில் அவச்யமான ஸந்தர்ப்பம் தவிர, மற்றவைகளில் ஸம்ஸ்கிருதத்தை கலக்காமல் எழுதினால் தான் ஸௌகர்யப்படும். இங்கிலீஷில் விஷயங்களை எழுதுவதால் மொழிபெயர்க்க சிரமமும், தாமஸமும் ஏற்படுகிறது. ஆகையால் எந்த விஷயத்தையும் தமிழிலேயே எழுதியனுப்பக்கோருகிறோம். மானேஜர்.

வட அம்பலம் ஸ்ரீ ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதி யோகீந்த்ராள் ஆராதனை.

நாளது தை-மீ 4உ இவ்வூரில் பினாகினி நதி தீரத்தில் ஸித்தி அடைந்திருக்கும் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளுள் ஒருவரான ஜகத்குரு அவர்களுக்கு ஆராதனை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தற்காலம் மேற்படி பீடாதிபதிகளான ஜகத்குரு அவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்ட மேற்படி அதிஷ்டானத்தில், ஸ்ரீ ஜகத்குரு அவர்களின் ஆக்ஞையின்படி மஹாந்யாஸ ஜப பூர்வமாக மஹாபிஷேகம் அலங்காரம், ஸஹஸ்ரநாமார்ச்சனை, தர்சனத்திற்காக பல ஊர்களிலிருந்தும் வந்திருந்த எல்லோருக்கும் ஸந்தர்பணம் முதலிய எல்லாக் கார்யங்களும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வளவனூர் வி. டி. ராமஸ்வாமி அய்யர் அவர்களால் செய்விக்கப்பட்டது. எல்லோரும் குரு மஹிமையைக் கேட்டு பரம ஆனந்தத்துடன் குருப்ரஸாதம் பெற்றுச் சென்றார்கள். ந. நி

கும்பகோணம் 7வது ஆண்டு தனுர்மாத கிரிபஜனை பூர்த்தி தினம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அனுக்ரஹத்தின் பேரில் சோலையப்பமுதலியார் தெருவிலுள்ள ஆஸ்திக வாலிபர்களால் மேற்படி தெருவில் தனுர்மாத கிரிபஜனையானது ஸ்ரீராம பஜனை மடம் டிரஸ்டி ஸ்ரீமான் டி எஸ் பஞ்சாபகேசய்யர் அவர்கள் ஆதரவின்கீழ் பக்திசிரத்தையுடன் நடைபெற்றது. விக்ரமவருஷ தைமீ 7உ (20—1—41) சோம வாரத்தன்று மேற்படி பஜனையின் 7 வது வருஷ பூர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விஸ்வநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேக அலங்காரமும் ருத்ரபாராயணமும், ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் நடந்தது. இரவு 7 மணிக்கு மேல் மதுரை பிர்ம்மஸ்ரீ எம் என் சுப்ரமண்ய சாஸ்திரிகள் பக்தியோகம் என்பதைப்பற்றி உபன்யாசம் செய்தார்கள். முடிவில் பெரியோர்கள் பல ஆஸ்திக யுவர்களுக்கு ஆசி கூறப்பட்டு இரவு 11 மணிக்கு நடந்தது.

R, கல்யாணசுந்திரம்,

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்கள். அவைகளைப்பற்றி சர்ச்சை நமக்கு இல்லை. நான் கே. எஸ். ஆர். அவர்களைப்பற்றிச் சொல்லவேண்டிய விஷயம் ஒன்று தான். தற்சமயம் தமக்கு ஹிந்து சபையில் ஸ்தானம் கிடைத்ததற்காக ஹிந்து மஹா சபையின் கொள்கைகளை ஆதரித்துப் பேசுகிறார்கள் என்று நினைக்கும்படியாயிருக்கிறது. கே. எஸ். ஆர். அவர்கள் தன் தவறை உணர்ந்து தர்ம விஷயத்தில் சஞ்சல புத்தி ஏற்படாமல் தீவ்ரமாக மத விஷயங்களில் நம் தலைவர்களுடன் உழைத்து ஸபலமாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஸாவேச்வரனை பிரார்த்திக்கிறேன்.

சிவராம கணபதி சாஸ்திரிகள்
மேல்மங்கலம்.

3

சமீபகாலமாக நமது சனாதனத் தலைவர்களுள் ஒருவரான ஸ்ரீமான் K. S. R. சாஸ்திரிகள் ஹிந்து மஹா சபையில் முக்கிய ஸ்தானம் வஹிப்பதைக் குறித்து சிற் சில சனாதனிகள் கண்டித்து எழுதியுள்ளார்கள். ஆசையினால் அவரிடம் நான் நேரில் கண்டு கேட்டதை விவரிக்கக் கடமைப் பட்டுள்ளேன் அவர் ஹிந்து மஹா சபையில் சேர்ந்தது முஸ்லீம்களின் அதிதீவிரக் கொள்கைகளைக் கண்டிப்பதற்கும் நமது (ஹிந்து) லௌகிக விஷயங்களை பாதுகாப்பதற்கும் மட்டுமே என்று சொன்னார். மேற்படி கொள்கைகளுடன் அவர் அச்சபையில் சேர்ந்தது நியாயமே ஆனால் இவர் சேர்ந்திருக்கிற சபையில் உள்ள பிரமுகர்களில் சிலர் நம்முடைய ஹிந்து மத சம்பந்தமாக அசிரத்தை உள்ளவர்களாகவும், சிலர் தீவிரமாறுதல் கொண்டுவர (சட்ட மூலமும் பிரசார மூலமும்) வேண்டுமென்ற அபிப்ராயம் உள்ளவர்களாகவும் உளர். மேற்படி அபிப்ராயம் உடையவர்கள் நம்முடைய K. S. R. சாஸ்திரிகளை தங்கள் வழிக்கு திருப்பிவிடாமல் இருக்கவேண்டுமென்பதற்கு கடவுளை பிரார்த்திப்போமாக. இச் சங்கதோஷத்தினால் வழி தவறின பெரியோர்கள் பலர். உதாரணமாக பண்டித மாளவியா காங்கிரஸில் சேர்ந்ததால் மதவிஷயத்தில் முற்றிலும்மாறுதல் அடைந்தார்

ஆதலால்நாம் பிரார்திப்பது என்னவென்றால் K. S. R. அவர்களுக்கு த்ருடபலமும் ஆள்கள் பலமும் இந்துமஹா சபையில் ஏற்பட்டு மேற்படி சபையை நமது சனாதன அபிப்பிராயத்திற்கு திருப்ப் முயலுவாராக. நமது இந்து சமூஹத்தை ராஜீய விஷயங்கள் மாத்திரத்தில் அன்றி மத விஷயத்திலும் அன்னிய மதஸ்தர்களும் நம்முடைய மதத்தில் உதித்த புல்லுருவிகளும் கெடுக்காமல் பாதுகாப்பதே ஸ்ரீ சாஸ்திரியாரின் நோக்கமாயிருக்கவேண்டும்.

N. R Iyer. B.A.

ப்ராஹ்மண மஹா ஸபை. விழுப்புரம்

இவவூரில் தை-மீ 4உ முதல் ஸ்ரீ த்யாக பரம்ம மஹோத்ஸவம் ஆரம்பித்து நடக்கின்றது. இவ்வுத்ஸவத்தை ப்ரம்ம ஸ்ரீ K. G. ராமுடு பாகவதர் அவர்கள், முனிஸிபல் கமிஷனர் ஸ்ரீமான் R. ஜெயராம அய்யர் முதலிய பிரமுகர்களுடையவும், மகாஜனங்களுடையவும் உதவியால் மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்கள். தை-மீ 4உ ப்ரம்மஸ்ரீ நாகர்கோவில் ஸ்தாணு சாஸ்திரிகள், "கிராதார்ஜுனீயம்" என்பதை ஸத்கதாகாலக்ஷேபமாக நடத்தினர்.

V. S, சுப்பிரமணிய சாஸ்திரி,
High School Sanskrit Pandit.

திருவிடமருதூர் ஸாமவேத பாராயணம்.

சென்ற 100 ஆண்டுகளாக கோனேரிராஜபுரம் மஹாவ்யாபகரும் சிஷ்டருமான ப்ரும்மஸ்ரீ ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் அவர்களின் பாட்டனார் கால முதற்கொண்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாளின் அனுக்ரஹ புரஸ்ஸரமான மேலான ஆதரவைக் கொண்டும், தென்னாட்டிலுள்ள பல ஆஸ்திக தார்மிகர்களின் பேருதவியையும், ஸஹாயத்தையும் மேற் கொண்டும்: நமது தமிழ் நாட்டின் நடுநாயகமாகிய மத்தியார்ஜுனம் என்று ப்ரக்யாதி பெற்ற திருவிடமருதூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில், திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்து, தீருதமனேவ்யாதி முதலானதுகளையும் தன்னை அண்டினவர்களை ரக்ஷிப்பதற்கு பத்த கங்கணராக விளங்கி வரும் ஸ்ரீ ப்ருஹத்குசாம்பிகா ஸமேத ஸ்ரீ மஹாலிங்க மூர்த்திக்கு ப்ரதி ஸம்வத்ஸரமும் தை மாதத்தில் நடந்து வரும் புஷ்யோத்ஸவத்தில் ஸாமவேத பாராயணம், ப்ராம்மண ஸந்தர்ப்பணை முதலியன நடந்து வருவது யாவரும் தெரிந்த விஷயம். நாளது விக்ரமஞு தை.மீ 19உ உத்ஸவம் ஆரம்பமாகிறது. 28உ புஷ்யம் தீர்த்தவாரி நடக்கிறது ஆகையால் யாவரும் ஷஷ்டி உத்ஸவனுக்கு வந்து தரிசித்தும் ஷஷ்டி கைங்கரியகளுக்கு தங்களாவன பேருதவி செய்தும் பரமகிருதார்தர்களாக ஆகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது என்று ஸ்ரீமான் ராமஸ்வாமி ச்ரௌதிகள் வகையரா அறிவிக்கிறார்கள்.

ஸ்ரீராதாகல்யாணம்.

மாம்பலம்

12உ மாம்பலம் அஷ்டபதி பஜனை ஸபையார் ஜனவரி மாஸம் கிரிப்ரதக்ஷிணம் செய்து முடிக்க ஸ்ரீ வைத்யநாதய்யர் கிருஹத்தில் அவர் புத்ரர் மூவராலும் ஷஷ்டி உத்ஸவம் நடந்தது. தலைவர் ஸ்ரீ ஹரிஹியின் உத்திரவுபடி ஸ்ரீ ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா கர்க்க ஸம்ஹிதை பிரும்ம வைவர்த்த புராணம் இவைகளில் கூறியபடி ஸ்ரீராதாகல்யாணம் உபன்யாஸம் செய்தார். குருபூஜை உஞ்சவிருத்தி பிராமண ஸமாராதனை கிராமபிரதக்ஷிணம் முதலியன அழகாக நடந்தன.

ஸ்ரீகிருஷ்ணபுரம்:— என்ற கோடம்பாககத்தில் 30 நாட்களும் பஜனை நடந்து ஞாயர் காலை ஸ்ரீராதாகிருஷ்ணனுடன் நடராஜ படமும் வீதிவலம் வந்து வேத பாராயணமும் நடந்தது. இரவு 8 மணிக்கு ஸ்ரீ பாண்டியா ஸதநத்தில் பிரும்மஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்கள்ஸ்ரீ ராதா தேவி யார்? வன் ராதா கல்யாணம் நடத்தல் வேண்டும்? பஜன மார்க்கத்தின் பெருமை? முதலியவைகளை இடையிடையே நித்யகர்ம மஹிமை தர்மத்தின் சிறப்பு முதலியவைகளையும் தெளிவாக உபன்யஸித்தார். ந.நி.

தீண்டாதாருக்கும் தனி ராஜ்யம்.

ராஜபோஜ் கருத்து

முஸ்லீம் லீக் பாகிஸ்தான் என்ற தனி ராஜ்யம் வேண்டுமென்று கேட்பது போல் இந்தியாவிலுள்ள 7 கோடி தீண்டாதார்களும் ஹிந்துக்களை விட்டுப்பிரிந்து தனிராஜ்யம் ஸ்தாபித்துக்கொண்டு தனியாக வாழப்பிரியப்படுவதாயும், அத்தகைய கிளர்ச்சி செய்ய உத்தேசமென்றும் தீண்டாதார் தலைவரான ஸ்ரீ ராஜ்போஜ் என்பவர் நாகபுரி தீண்டாதார் கூட்டத்தில் பேசினார்.

ஆஸ்திக ஹிந்து மாதர்கள் மகாநாடு,

திருவண்ணாமலை

ஸ்ரீமதி பட்டம்மாள் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

(1) சனாதனமான ஆஸ்திக ஹிந்து தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டியதற்கும் புனருத்தாரணம் செய்யவேண்டியதற்கும் நம் சகோதரிகளும் தாய்மார்களும் ஒவ்வொரு ஊரிலும் ஆஸ்திக ஹிந்து மாதர்கள் ஸங்கம் ஸ்தாபித்து நம் தர்மங்களையும் அவைகளின் உண்மையான தத்வங்களையும் அநுஷ்டானங்களையும் அதன் மூலம் தெரிந்துகொள்ளவேணுமென்று இந்த மஹாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்:—தலைவர்

ஆமோதித்தவர்:—எ. எஸ். மீனாக்ஷி அம்மாள். ஏகமனதாக நிறைவேறியது.

(2) நம் ஆஸ்திக மதத்தின் அருமை பெருமைகளையும் அதன் ஒவ்வொரு தர்மத்தையும் அறிந்து அனுஷ்டானம் செய்வதால் உண்டாகும் இகபர சுகங்களையும் அறியாத நம் சில சகோதரிகள் நம் தர்மத்திற்கு விரோதமானதும் நம் வாழ்க்கைக்கு அனேக இடையூறுகளையும் துன்பங்களையும் விளைவிக்கக்கூடியதுமான சில ஸ்தாபனங்களில் ஈடுபட்டும் அவைகளை பலப்படுத்தியும் வருவதையும் இந்த மஹாநாடு மிக விசனத்துடன் கண்டிக்கிறது.

பிரரேபித்தவர்:—ஸ்ரீமதி நாராயணி அம்மாள்,

ஆமோதித்தவர் குப்பம்மாள்.

(3) நம் தர்மத்தின் கோட்பாடுகளின் அனுஷ்டானத்தின்படியும் ஸ்திரீ தர்மத்தில் முக்யமானது நம் சஹோதரிகள் ஒவ்வொருவரும் அவரவர்கள் கிருஹத்தில் உள்ள ஆணும் பெண்ணும் குழந்தையும் பெரியாரும் ஹிந்து தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டிய உதவி புரிய வேண்டியதும் அந்த தர்ம அனுஷ்டானமும் நம் கிருஹங்களில் நிலைத்திருக்கச் செய்யவேண்டியதுமே முக்கிய கடமைகள் என்பதை யுணர்ந்து தங்கள் வாழ் நாளை நடத்தி வரவேண்டுமென்று இந்த மஹாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்:—ஸ்ரீமதி என். ஆர். கே. மதுரைவல்லி அம்மாள்,

ஆமோதித்தவர் சுப்புலெக்ஷிமி அம்மாள்.

(4) ஆஸ்திக ஹிந்து ஸ்திரீகள் ஸங்கங்களில் படனங்களும் சாஸ்திர இதிஹாஸ புராண ச்ரவணங்களும் செய்து அதன் மூலம் தங்கள் மத அறிவையும் அனுஷ்டானத்தையும் உணர்ந்து கொள்ளவேண்டியதென்று இந்த மஹாநாடு தீர்மானிக்கிறது.

(5) விவாகத்தடைச் சட்டங்களும் விவாக ரத்துச் செய்து கொள்வதற்கு ஆதரவு கொடுக்கும் சட்டங்களும் நம்ஸ்திரீகள் நன்மைக்கும் வாழ்வுக்கும் மிகத்தீங்கை உண்டுபண்ணி இல்வாழ்க்கையையும் இல்லற தர்மத்தையும் அழிப்பதற்கும், க்ருஹ தர்மத்தை அழிப்பதற்கும், ஹேதுவானவை யென்றும், ஆனதால் அந்த சாரதா சட்டம் முதலான விவாகத்தடைச் சட்டங்களையும், ரத்து செய்யவேணுமென்றும், விவாகரத்து சட்டம் யாதொன்றும் செய்யக்கூடாதென்றும் இந்த மஹாநாடு தீர்மானிக்கிறது.

ஸ்ரீ செல்லம்மாள்

ஆமோதித்தவர் ஸ்ரீ மீனம்பாள்

சந்தா குறைக்கப்பட்டிருக்கிறது.

வருஷத்திற்கு ரூ. 2---4---0 தான்.

ஆஸ்திகர்களின் நன்மையை உத்தேசித்து 1941 வருடத்திற்கு ஆர்யதர்மம் சந்தாவை ரூ. 2—4—0 ஆக செய்திருக்கிறோம்.

ஆங்காங்குள்ள தமிழ் எழுதப் படிக்கத்தெரிந்த யாவரும் சந்தாதார்களாகச் சேர்ந்து பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.

திருப்பணித்துறை

உபந்நியாஸம்.

புதன் வியாழன் தினங்களில் இந்து மதம், வர்ணதர்மம் இதைப்பற்றி ஷஷ்டி ஊர் ஸ்ரீ சிவ ஸன்னிதியில், ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஆக்ஞானுக்கிரகப்படி அம்மனூர் பிரும்மஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரிகளவர்கள், இந்தக் காலத்தில், பழைய வைதிகமதங்களை சீர்திருத்தம் செய்யும் பிரயத்தனதைத் செய்துவருபவர்களும், மற்றுமுள்ள, ஸகலர்களும் நன்கு உணருமாறு நல்ல பிரமாணங்கள். யுக்திகள், அனுபம் இதுகளை எடுத்துக் காட்டி நன்மொழி பொழிந்தார்கள், இவ்விதமே, மலபார், பாலக்காடு பக்கங்களில் ஸகல ஜனக்ஷேமதைத் உத்தேசித்து ஷஷ்டி ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞாபித்திருக்கிறார்கள்.

கொல்லங்கோடு

உபந்நியாஸம்

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியார் அவர்களால் கேரளத்தில் தர்ம பிரசாரத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கும் வேதாந்த விபூஷணம் ஸ்ரீ ஆர் வெங்கடராமசாஸ்திரிகள். வேதம், ஸத்யம், ஸந்தியாவந்தனம், புருஷஸூக்தம், ஹிந்து மத பிரமாணங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி 6—1—41முதல் ஐந்து கிராமங்களில் வெகு எளிய நடையில் உபந்நியாஸித்தார்கள். நாராயணவாத்தியார்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் கவர்மெண்டார் 3300 கோடி ரூபாய் வருஷச் செலவுக்கு பட்ஜெட் செய்திருக்கிறார்கள்.

* * * *

6¼ விதத்துக்கு மேல் விவசாயிகளிடம் வட்டி வாங்கக்கூடாதென்று சட்டம் நடவடிக்கையில் சாத்யமிருக்கவில்லையென்றும் அதை கவர்மெண்டார் மாற்றவேண்டுமென்றும், கொவாபரேடிவ் ஸொஸைடீஸ் ரிஜிஸ்ட்டார், டிபார்ட்மெண்ட் 1939—40, வருஷத்திய ரிபோர்ட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ அய்யாதுரை அய்யர் அவர்கள் எழுதிய புஸ்தகங்கள்.

ராமாயணம் யோகசாஸ்திர நிரூபணம்.		0—8—0
பாகவதம்	do	0—4—0
கிருஷ்ண சரிதம்	do	0—2—0
பொதுமத போதினி		0—2—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட் கும்பகோணம்.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

வெளியூர்ச் செய்திகள்

திருவிசலூரில் வைகுண்ட ஏகாதசியன்று பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளால் ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் ஸன்னதியில் துருவ சரித்திரம் உபந்நியஸிக்கப்பட்டது.

* * * *

இராமேச்வரம் தார்மிக யுவக் சங்க ஆதரவில் தனுர்மாஸ பஜனை 30 நாள் நடத்தப்பட்டு வைகுண்ட ஏகாதசியன்று ஸப் ரிஜிஸ்தர் ஸ்ரீ சுப்பய்யா அய்யர் ஏகாதசி மஹாத்மிய உபந்நியாஸம் செய்தார். ராதா கல்யாண மஹோத்ஸவமும் நடந்தது. தஞ்சை ஜில்லா போர்டார் சமபந்தி போஜன விஷயமாகச்செய்த தீர்மானத்தை ஷை சங்க கூட்டத்தில் கண்டிக்கப்பட்டது.

* * * *

சீகாழில் ஸ்ரீமடம் முத்ராதிகாரி ஸ்ரீ சுப்ரமண்ய அய்யர் கிரஹத்தில் கீதோபந்யாஸக ஸ்ரீ சுப்பராமய்யரவர்களால் ருக்மாங்கத சரித்ரம் உபந்யஸிக்கப்பட்டது. ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் அனுக்ரஹித்த சால்வை, விபூதி பிரஸாதம் ஆகியவை முத்ராதிகாரியால் உபந்நியாஸகருக்கு அளிக்கப்பட்டன.

ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ கல்யாணராமய்யர் கிருஹத்தில் ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளால் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீபாகவத பிரவசனம் 29௳ பானுவாரத்துடன் ஸம்பூர்ணமாகியது. ஸன்னதிவீதிச் சிறுவர்களால் தனுர்மாதபஜனை சிறப்பாக நடைபெற்றது. தனுர்மாதத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் ஸ்ரீ ஆசார்யாள் நியமனப்படி சுமார் லக்ஷம் வரையில் சிவ ராமநாம ஜபம் செய்தார்கள்.

* * * *

மன்னார்குடியில் மார்கழிமீ 26௳ யன்று ஸ்ரீமடம் முத்ராதிகாரி ஸ்ரீ தியாகராஜய்யரவர்கள் கிருஹத்தில் பிரம்மஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் கோபிகாகீதம் என்ற விஷயம் உபந்நியஸிக்கப்பட்டது. மறுதினம் குசேலோபாக்யானமும் ஷை முத்ராதிகாரிகள் கிரஹத்தில் நடந்தது. தனுர்மாத கிரி பிரதக்ஷிண பஜனையை முன்னிட்டு ராதாகல்யாணமும் 1200 பேருக்கு பிராம்மண ஸந்தர்ப்பணமும், ஸங்கீத கச்சேரியும் உபந்நியாஸமும் ஸ்ரீ ஆஞ்சனேய உத்ஸவமும் ஸ்ரீ ராஜகோபாலய்யர் அவர்களின் ஸஹாயத்தால் நடத்தப்பட்டது.

* * * *

ஸ்ரீவாஞ்சியத்தில் தனுர் மாதம் 30நாளும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தலைமையில் பஜனை கோஷ்டி ரொம்பவும் பக்திசிரத்தையுடன் நடைபெற்றது.

* * * *

கள்ளக்குரிச்சியில் நாச்சியார் கோவில் லக்ஷ்மீமந்திரம் அபிநவ ஸரஸ்வதீ வாங்முக ரத்நகோச வித்வத்சிரோமணி பண்டிதராஜ குருவுர்ய ஸ்ரீ நடாதூர் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள் விஜயம்செய்து ஸனாதன தர்மம் ஆசார்ய பக்தி தீர்த்தமஹிமை முதலிய பல அபூர்வ விஷயங்களைப்பற்றி உபந்நியஸித்தார்கள். ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் சால்வை முதலிய ஸம்மானங்களை அனுப்பி ஸ்ரீ நடாதூர் ஸ்வாமிகளை கௌரவித்தார்கள்.

* * * *

வளவனூரில் ஸனாதன தர்மஸபையினாதரவில் மார்கழி 25௳ முதல் பஜனை முடிந்த பிறகு பிரம்மஸ்ரீ டி வி ராமசேஷ சாஸ்திரிகளால் பக்தியோகம் என்ற விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் சிறப்பாக நடத்தப்பட்டது. அன்று கீதா ஸாரம் என்ற விஷயம் ஷை சாஸ்திரிகளால் பிரஸங்கம் செய்யப்பட்டது திருவிசலூர் ஸ்ரீ அய்யாவாள் கைங்கர்யத்திற்காக இந்த கிராமவாஸிகள் 24-ரூ ஷை சாஸ்திரிகளிடம் கொடுத்தார்கள்.

* * * *

திருச்சியில் தார்மிக வித்யா ஸங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யரவர்கள் கிரஹத்தில், சேங்காலிபுரம் ஸ்ரீமான் குஹதாஸ் நடராஜய்யர் அவர்களால் "பக்தியோகம்" "பகவத் பஜனை" என்ற விஷயங்களைப்பற்றி இரண்டு சிறந்த பிரஸங்கங்கள் செய்யப்பட்டன. தர்மபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஸோமசுந்தர தம்பிரான் உபந்நியாஸகருக்கு வந்தனோபசாரம்கூறி உபந்நியாஸத்தை மிகவும் கொண்டாடினார்.

* * * *

சேங்காலிபுரம் மார்கழிமீ கிரிப்பிரதக்ஷிணம் முடிவடைந்த 13-1-41ல் ஸ்ரீ குஹதாஸ் நடராஜய்யரவர்கள் பஜனையின் பிரபாவம், என்ற விஷயம் பற்றி பிரஸங்கம் செய்தார். மஹாதேவன், ராஜாராமன், குருமூர்த்தி முதலிய சிறுவர்களின் சிரத்தையைப் பாராட்டினார். ஸ்ரீமான்கள் அப்பாசாமி சாஸ்திரிகள், அய்யா தீக்ஷிதர், பாலகிருஷ்ண அய்யங்கார் முதலியவர்களும் பேசினார்கள், ஸ்ரீரங்கநாத ஸ்வாமிக்கு அர்ச்சனை முதலியவைகளை ஸ்ரீ தியாகராஜய்யர் நன்கு நடத்தினார்.

விழுப்புரத்தில்- ஜனவரி மீ 1-௳யன்று சென்னை ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களால் தெய்வநெறிக் கழகத்தின் ஆதரவில் கீதாமஹிமையைப் பற்றி பல பெரியோர்களின் அபிப்பிராயத்தை வெளியிட்டு ஓர் பிரஸங்கம் செய்யப்பட்டது. 5—1—41-ல் கழகபஜனை பூர்த்தி கொண்டாடப் பட்டது வைகுண்ட ஏகாதசியிலும் பஜனை நடத்தப்பட்டது. வரதராஜ ஸ்வாமிகள் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ராஜகோபால அய்யங்கார் முதலியவர்கள் கீதையின் பிரபாவத்தைப்பற்றி பேசினார்கள்.

* * * *

சிவபுரம் தஞ்சை ஜில்லா குடந்தைக்கண் அமைந்த ஷை திவ்ய க்ஷேத்ரத்தில் சென்ற விஜயதசமிமுதல் கிராம வாஸிகள் ஆதரவில் சிவபுரம் பண்டித ஸ்ரீ சுவாமினாத சிவாசாரியார் அவர்களால் ஒவ்வொரு தினமும் இரவு 8 மணிமுதல் ஸ்ரீஸ்காந்த புராண ப்ரவசனம் பக்திரசம் பரவும்படி உபன்யஸிக்கப்பட்டு வருகிறது,

திண்டுக்கல்

வர்ணாச்ரம ஸங்கம் அதிகாரிகள் தேர்தல்

ஷை ஸங்கத்தின் பொதுக்கூட்டமொன்று ஸ்ரீ சங்கரமடத்தில் 13—1—41ல் தலைவர் அட்வகேட் ஸ்ரீ விச்வநாதய்யர் அவர்கள் அக்கிராஸனத்தில் கூடியது. கீழ்க்கண்ட கனவான்கள் நிர்வாஹஸபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஸ்ரீமான்கள் வி ஆர் விச்வநாதய்யர் அட்வகேட். ஆர் பாலஸுப்ரமண்ய அய்யர் எம் ஸ்வாமிநாத அய்யர் அட்வகேட். எஸ் ராமஸ்வாமி அய்யர் ரிடையர்ட் இஞ்ஜினியர். ஆர் ரங்கஸ்வாமி அய்யர் வக்கீல். ஸி ஸுந்தரமய்யர். எஸ் நாகஸ்வாமி அய்யர் ரிடையர்ட் ஸ்ப் மாஜிஸ்ரேட். எஸ் வெங்கிட கிருஷ்ணய்யர் பி ஏ எல் டி. ஸ்ரீ விச்வநாதய்யரவர்கள் தலைவராகவும் ஸ்ரீ பாலஸுப்ரமண்ய அய்யர் கார்யதரிசியாகவும் ஸ்ரீ ஸ்வாமிநாதய்யர் அட்வகேட் டிரஷராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீவைத்யநாததீக்ஷிதருடைய ஸ்மிருதிமுக்தாபலம் கிரந்தம்19—1—41 முதல் அர்த்தம்சொல்ல ஏற்பாடாகியிருக்கிறது.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.